
WESLEY HIGH SCHOOL
(NATIONAL SCHOOL)
KALMUNAI

UTMOST FOR THE HIGHEST

# கண்ணோட்டம்



## க. பொ. த (உ / த)

## மாணவர் தின விழா - 2022

உவெஸ்லி உயர்தர பாடசாலை - கல்முனை

(தேசிய பாடசாலை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவெஸ்லி உயர்தர பாடசாலை

தேசிய பாடசாலை

கல்முனை

# கண்ணோட்டம்

க. பொ. த (உ/த)

மாணவர் தின விழா - 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவெஸ்லி உயர்தர பாடசாலை

## தேசிய பாடசாலை,

## கல்முனை.

**க. பொ. த (உ/த) மாணவர் தின விழா –2022**

காலம்

**11-01-2023**

இடம்

**நல்லதம்பி மண்டபம்**

தலைமை

**திரு. செல்லத்தம்பி கலையரசன்**

கல்லூரி அதிபர்

பிரதம அதிதி

**திரு. பூ. கோபாலரெத்தினம்**

செயலாளர்

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணசபை

திருகோணமலை.

கௌரவ அதிதி

**திரு. N. புள்ளநாயகம்**

ஓய்வு நிலை பணிப்பாளர்,

விஞ்ஞான வளநிலையம்,

மட்டக்களப்பு.

சிறப்பு அதிதி

**திரு. S. சரவணமுத்து**

கோட்டக் கல்விப் பணிப்பாளர்,

கல்முனை - தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

எந்தையே உம் ஊழியர்
எழுப்பிய கூடம்
உந்தயையாலே பாலர்
உற்றார் ஆசி கிரீடம்
பந்த சித்தியாம் கிருபை
பாதை தன்னில் காணும்
இந்த நேரம் அன்னாரோ
டேத்துவோமும் நாமம்

ஓய்வு அற்று மாறியே
ஓடும் மோன ஆண்டு
தேய்வற்ற புது முக
தோழர் தந்த தீண்டு
மாய்வு தோன்றமறந்தார்
மன்னுந் திடம் பயம்
ஓய்ந்தாலும் மாறா உம்மோ
டொன்றாகிச் சிறந்தார்

நற்றானி யத்தை முன்னோர்
நட்டார் நாம் அறுக்க
பெற்றுப் பின்னோர் விளைவை
பண்ட(க)சாலை சேர்ப்பார்
அற்றை நாள் தரும் பாடம்
உத்தம சேவையாம்
முற்றாய் உயர்ச்சிக்கே எம்
முழு நோக் கன்றாடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MOTTO

Utmost for the Highest

அதி உயர்ச்சிக்கான பரிபூரண முயற்சி

## VISION

Quality Education, the key to Success
of Future Generation

தரமான கல்வி எதிர்கால சந்ததியின்
வெற்றிக்கான திறவுகோல்

## MISSION

"Pave the way towards inculcation, innovation Skills and enhancing Social Economic Development among Students, to become Useful and Patriotic Citizens in keeping with National Education Policy"

"எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவாறு சமூக பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு மாணவர்களைத் தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப நாட்டுப்பற்றுள்ள புத்தாக்க திறன்மிக்க, பயன்மிக்க பிரஜைகளாக திகழ வழிசெய்து கொடுத்தல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர தின
# வரவேற்புக் கீதம்

அறியாமை இருள் நீக்கி அறிவு வழிகாட்டும்
மறைஞான மேலோர்கள் அன்புடனே வாரீர்

மெஞ்ஞான வாழ்விற்கு உரிய வழிகாட்டும்
உத்தமர்கள் ஒன்று கூடி வாழ்த்துக் கூற வாரீர்

கல்வியின் கரை தொட கல்விக்கூட வாழ்வில்
கடும் முயற்சி புரிந்த எங்கள் காவலரே வாரீர்
(அறியாமை)

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று நாமும்
உயர்ந்த ஆசீர்வாதம் தந்திடவே வாரீர்

பல்கலைக் கழகம் சென்று பண்புடனே
அகிலம் போற்றும் சீலராக சிறக்க வாழ்த்துத் தாரீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்லூரி முதல்வரின் ஆசிச் செய்தி

உலகில் அறிவு இரட்டிப்படைகின்ற கால இடைவெளிகள் மிகக்குறுகிக்கொணடே செல்லும் அதேவேளை மனித வாழ்க்கை முறைகளும் மிகச்சிக்கலடைந்து செல்கின்றது. எனினும் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கானதும் எதிர்கால வளம்படுத்தலுக் கானதுமான கல்வித் தேடல் அதிகரித்தவாறே செல்கின்றது. எனவே இவ்வாறான காலகட்டத்தில் கல்முனைப் பிரதேசத்தில் 139 வருடங்களாக கல்விப் பணியாற்றி வரும் எமது உவெஸ்லி உயர்தர பாடசாலையின் 2022 (2023) ஆம் ஆண்டு க. பொ. த. உயர் தர பரீட்சைக்கு தேற்றவுள்ள மாணவர்களால் நடாத்தப்படவுள்ள உயர்தர தின விழாவில் வெளியிடப்படும் "கண்ணோட்டம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைக்கின்றேன்.

2020ஆம் ஆண்டிற்குப் பின்னரான காலப்பகுதியானது மாணவர்களின் கல்வியில் நேர், எதிர் விளைவுகளை ஏற்படுத்தியது என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடம் கிடையாது. அத்துடன் உயர்கல்வி கற்கும் முழுக்காலத்தையும் கடந்து வந்த அல்லது இக்காலத்தினைப் பூரணமாக பயன்படுத்திய மாணவர்களாகவே நான் இவர்களைக் காண்கின்றேன். ஏனெனில் இதற்கு முன்னைய காலங்களில் கல்வி கற்ற மாணவர்களுக்கு கிடைக்காத பல வாய்ப்புகள் இவர்களுக்கு கிடைத்துள்ளன. அதில் ஒன்று கல்வி கற்பதற்கான காலப்பகுதி அதிகமாக இருந்தமை, மற்றையது பாடசாலைக் கல்விக்கு மேலதிகமாக பிரபல என்னும் அடைமொழியுடன் பெயர் வரும் ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் வாய்ப்பும், அவர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரி வினாதாள், விடைகளுக்கான விளக்கங்களைப் பெற்று முன்னேற்றமடையும் சந்தர்ப்பமும் கிடைத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான மாணவர்களே நாம் கொரோனா தொற்றுக்காலத்தில் வீடுகளைத் தாண்டாது பலநாட்கள் பயந்து ஒடுங்கி அடைக்கப்பட்டிருந்தமையும், எரிபொருளுக்காக வீதியோரங்களில் வரிசையில் நின்றமையும் மறந்து செல்லும் அதேவேளை இவ்வாறான இடர்காலங்களில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி அகில இலங்கை மட்டத்தில் பல சாதணைகளை நிகழ்த்திய மாணவர்களை பிரதேசத்தில் அறியும் போது எம்மால் முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்பதே உண்மை.

எனவே இவ்வாறான அடிப்படைகளில் உங்களது உயர்தர சிறப்புப் பெறுபேறுகளையும், சாதனைகளையும் நாமும் உங்களது பெற்றோர்களும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். ஆதலால் நீங்கள் அனைவரும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு சிறப்பான சித்திகளைப் பெற்று மென்மேலும் சிறப்புற்று வாழ என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இம் மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தரம் வரை தங்களது பிள்ளைகள் போல் வழிகாட்டி கல்வி வழங்கி மாணவர்களின் வெற்றியையும், உயர்ச்சியையும் தமது உயர்ச்சியென கருதி தன்நலம் கருதா அர்ப்பணிப்பான சேவை செய்த ஆசிரியப் பெருந்தகைகளுக்கு பாடசாலைச் சமூகம் சார்பாகவும், பெற்றோர் சார்பாகவும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. செல்லத்தம்பி கலையரசன்**
அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதம அதிதியின் ஆசிச் செய்தி

கல்முனை உவெஸ்லி கல்லூரியில் கற்று வெளியேறும் மாணவர்களின் க. பொ. த உயர்தர தின விழாவையொட்டி 2022 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்களால் வெளியிடப்படும் "கண்ணோட்டம்" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நகமும் சதையும் போல கிழக்கில் இணைந்து வாழும் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களை பின்பற்றும் மாணவர்கள் இணைந்து கற்கும் இப்பாடசாலை நீண்ட வரலாற்றைக் கொண்டது. பல பெரும் தலைவர்களை உருவாக்கியுள்ளது. இம் மாணவர்களும் இவ்வரலாற்றில் இணைந்து கொள்கின்றார்கள் என்பதில் பூரிப்படைகின்றேன்.

பாடசாலை என்பது வெறும் பரீட்சை முடிவுகளை உருவாக்கும் தளமல்ல. பாட, இணைப்பாட, மறைபாட விதான செயற்பாடுகளுக்கு ஊடாக ஆளுமைபெற்ற நாளைய சந்ததிகளையும் சமூகத்தையும் உருவாக்கும் களமாகும். இக் களத்திற்கு கணிசமான பங்களிப்பினை இக் கல்லூரி கடந்த காலங்களில் நல்கியுள்ளது. எதிர் காலத்திலும் இந்த இணைந்த பங்களிப்பு தொடர வேண்டும்.

இம்முறை பாடவிதானச் செயற்பாடுகளுக்கூடாக பங்களிப்பு செலுத்தி கோவிட் 19 தாக்கத்தின் கல்விச் சவால்களை தகர்தெறிந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாணவர்கள் எதிர்கால இலட்சியங்களை அடைய இறைவனைப் பிரார்த்தனை செய்து வாழ்த்துகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

**திரு. ஶ்ரீ. கோபாலரெத்தினம்**
செயலாளர்
கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாண சபை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

கல்முனை மாநகரின் மத்தியில் மங்காத தீபமாக ஒளி பரப்பிக் கொண்டிருக்கும் பெருவிருட்சமாம் உவெஸ்லி உயர்தர பாடசாலையின், 2022ஆம் ஆண்டு உயதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களால் வெளியிடப்படும் (கண்ணோட்டம்) சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அகம் மகிழ்கின்றேன்.

ஈழத்தவர் போற்றும் கல்விப் புலம்சார் அறிஞர்களான சுவாமி விபுலானந்தர், புலவர்மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, பேராசிரியர் M.A. நு்.மான் ஆகியோரை உருவாக்கிய பெருமைக்குரிய பாடசாலை உவெஸ்லி உயர்தர பாடசாலை. இத்தகையோர் வரிசையிலே எதிர் காலத்தின் தூண்களாக உருவாகவுள்ள க.பொ.த உயர்தர மாணவர்களது உயர்தர மாணவர் தின விழாவையொட்டிய கண்ணோட்டம் எனும் இப்பிரசவிப்பு வாழ்த்துதற்குரியதே.

பதின்மூன்று வருடம் பயிரிட்டு, பண்படுத்தி, அறுவடையை எதிர் கொள்ளும் இறுதித் தருணம் இது. மாணவர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் கொண்ட இலக்குகளை அடைய பரிபூரண முயற்சியுடன் முயன்றால் நிச்சயம் வெற்றி கிட்டும். தன்னம்பிக்கையுடன் பரீட்சைக்குத் தோற்றிச் சிறந்த பெறுபேற்றைப் பெற்று, உங்களுக்கும் உங்கள் பாடசாலைக்கும் எமது வலயத்திற்கும் பெருமை சேர்ப்பது உங்களது கடமை. எல்லாம் வல்ல இறையருள் கிட்ட வாழ்த்தி ஆசி கூறுகிறேன்.


**எம். எஸ். சஹுதுல் நஜீம்**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
கல்முனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரவ அதிதியின் ஆசிச் செய்தி

பாடசாலைக் கல்வி 13 வருடங்கள் இந்த 13 வருட கற்றலின் வெளியீடு க. பொ. த. உயர்தர பரீட்சை மூலம் வெளிக்கொணரப்படும் அன்றியும் பாடசாலை வாழ்க்கையும் நிறைவடைந்து விடும். நான் உவெஸ்லி உயர்தர பாடசாலைக்கு 1980ம் ஆண்டு உயர்தர கணித பிரிவுக்கு தூயகணிதம், பிரயோக கணிதம் கற்பிக்கும் ஆசிரியராக கடமையிலிருந்த போது அமரர். யோகம் வேலுப்பிள்ளை அவர்கள் அதிபராக இருந்தார். 1983ம் ஆண்டு கணிதப் பிரிவில் பொறியியல் துறைக்கு 5 மாணவர்களும், பௌதிக விஞ்ஞானத்திற்கு 28 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன் அன்றைய காலத்தில் இவ்விடயம் இப்பிரதேசத்தில் பேசுபொருளாக இருந்தது என்றால் அது மிகையாகாது. மற்றும் ஒழுங்காற்றுக் குழுவின் தலைவராக இருந்து மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை கவனித்ததை எண்ணி பெருமிதங் கொள்கின்றேன்.

மாணவர்கள், ஆசிரியர்கள் கூறுகின்ற விடயத்தை செவிமடுத்து அதனை ஒப்புவிக்கும் கற்றல் முறையிலிருந்து விடுபட்டு ஆராய்ந்து சுயமாகக் கற்கின்ற முறைக்கு மாற வேண்டும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும். இப்பிரதேசத்தில் பிரபல பாடசாகளில் ஒன்றாகத் திகழ்கின்ற உவெஸ்லி உயர்தர பாடசாலை தனக்கென்று சில பாரம்பரியங்களைக் கொண்டுள்ளது. இம்முறை உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் துரதிஷ்டவசமாக கடந்த காலத்தில் ஏற்பட்ட அசாதாரண பெருந்தொற்றுநோயின் தாக்கத்தினால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டவர்கள் என்பது உண்மை. அதையும் தாண்டி சாதனை படைப்பார்கள் என்ற வேட்கையோடு இம்மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று நற்பிரஜைகளாக திகழ்வதுடன் தமக்கும் கற்ற பாடசாலைக்கும் பெருமை தேடித்தர வேண்டுமென வாழ்த்துவதில் பெருமிதங்கொள்கின்றேன்.

**திரு. N. புள்ளநாயகம்**
ஓய்வு நிலை, பணிப்பாளர்,
விஞ்ஞான வளநிலையம்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறப்பு அதிதியின்
# ஆசிச் செய்தி

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசலையின் 2022 ம் கல்வி ஆண்டில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களின் விடுகை தின விழாவின் போது வெளியிடப்படும் கண்ணோட்டம் எனும் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

இவ் வருடம் உயர்தர பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் கருத்தூன்றி தெளிவாகக் கற்று இப்பரீட்சையை சிறந்த முறையில் எழுதி அறிவாற்றல் மிக்க ஒழுக்கமுள்ள பிரஜைகளாக இந்த நாட்டில் பிரகாசிக்க வேண்டுமென்று வாழ்த்துவதில் பெருமை கொள்கிறேன்.

மாணவர்களாகிய நீங்கள் முழு நம்பிக்கையோடு இப் பரீட்சைக்குத் தோற்றி வெற்றி பெற வேண்டும். ஏனெனில் இப்பரீட்சை உங்களது வாழ்க்கையை தீர்மானிக்கின்ற எதிர்காலத்தை மாற்றியமைக்கின்ற பரீட்சை. எனவே, இப்பரீட்சைக்கு மன உறுதியுடனும் தைரியத்துடனும் தோற்றி பரீட்சையில் வெற்றி பெற வேண்டும்.

உங்களது தாய் தந்தையினர் கண்ணியமிக்கவர்களாக, கௌரவமானவர்களாக் மிகவும் பண்பாளர்களாகவும் உங்களை உயர்த்தியிருக்கின்றார்கள். நீங்கள் எப்போதுமே அவர்களின் அறிவுரைகளுக்கு கனம் பண்ண வேண்டும். அதே போல் உங்கள் அதிபர், ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

நீங்கள் உரிய காலத்தையும் இடத்தையும் ஆய்ந்து அறிந்து செயற்பட்டால் உலகம் கூட கைக்குள் வந்துவிடும் என்கிறார் வள்ளுவர். எனவே உங்களுக்குக் கிடைக்கத்தக்க கல்வியை கற்கும் காலத்தில் கற்றால் வெற்றிப் பாதையில் வீறு நடை போட முடியும் என்பது எனது கருத்தாகும்.


**திரு. S. சரவணமுத்து**
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
கோட்டக் கல்வி அலுவலகம்
கல்முனை - தமிழ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## *The Message from the Deputy Principal*

I feel honour to have been given the opportunity to give a message to the souvenir published by the 2022 Batch of G C E A/L students of Wesley High School. As they are leaving school after the completion of thirteen years' school education, they are publishing this souvenir to mark the important occasion of their life.

We know millions of students from different places and countries have not got the access to even primary education because of poverty, diseases, natural disasters, terrorism and many more reasons. While comparing with them, these students are really fortunate for having a great opportunity to get a quality education for a long time. Education is the key to unlocking the golden door of freedom. Freedom means the power or right to act, speak, or think as one wants without hindrance or restraint. As they have got the key, they can mould their future full of success.

At our school, the students have been nurtured and prepared for the outside world and a strong basement has been laid for their next level. This school has always attempted to give the students a good exposure and a congenial environment. Sometimes, we were strict while delivering our duties towards the students. It was only because we wanted to prepare them for all types of situations in the future. Life outside the school may not always be smooth and bed of roses. They may have to walk on thorns and face critical challenges. But we hope that they will encounter everything with full strength and vigour.

My advice to all my dear students is that they must be determined in their life and never look back. Past must always be considered a lesson, not a deterrent. They must not be afraid to make mistakes and lament their mistakes, instead, awake, arise, learn from their mistakes and move ahead. I request them to always look ahead and be optimistic while taking up new projects, assignments or challenges in their personal or professional life. They must be focused on achieving their goal despite the hard tests that life throws at them.

I would also like to tell them not to restrict themselves to the boundaries of work and earning money while they must do well in their professional life. They must take time for their health care and family life. They must use their knowledge and power for making others happy and successful.

I wish all of them the very best for their future!

**B. Sajindren**
*Deputy Principal*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவி அதிபரின்
# ஆசிச் செய்தி

நூறாண்டுகளுக்கு மேலாக கல்முனை மாநகரில் கல்வியை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் உ வெஸ்லி உயர்தர பாடசாலை என்ற கீர்த்திமிகு கல்விக் கூடத்தில் பதின்மூன்று ஆண்டுகள் கல்விகற்று இன்னும் சில வாரங்களில் தங்கள் பொதுத் தேர்வுக்கு தோற்றவுள்ள மாணவர்களால் வெளியிடப்படுகின்ற நினைவு நூலில் ஒரு வாழ்த்துச் செய்தியை வழங்கும் வாய்ப்பைப் பெற்றதற்காக நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இறுதித் தேர்வு குறித்து மாணவர்கள் கவலைப் பட வேண்டாம் என்றும், நம்பிக்கையுடன் தேர்வை எதிர்கொள்ளுமாறும் அந்த மாணவர்களை அறிவுறுத்துகின்றேன். அனைவரும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதே எனது வாழ்த்தும் விருப்பும் ஆகும். எனினும் யதார்தமாக நோக்கினால் சில மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படலாம். இன்னும் சிலர் பல்கலைக்கழக சேர்க்கைக்குத் தேவையான மதிப்பெண்களைப் பெறாமல் போகலாம். நீங்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும் கவலைப்பட வேண்டாம். உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் நல்ல தொழில் வாய்ப்புகளைப் பெறவும் பல வழிகள் உள்ளன. தொழிநுட்பக் கல்லூரிகளும், தொழிநுட்ப பல்கலைக் கழகங்களும் நாட்டின் நாலாபுறமும் அமைந்து உள்ளன. நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில் தொழில்தேர்ச்சி பெற்றவர்களாக மாற வேண்டும் என்பதும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய வேண்டும் என்பதும் மிக முக்கிய விடயங்களாகும்.

நான் உங்களுக்கு இன்னு சில ஆலோசனைகளைக் கூற விரும்புகிறேன். தாரகைகள் நடுவே தண்மதியென ஜொலிக்க வேண்டுமானால் சரியான நேரத்தில் சரியான செயல்களை திட்டமிட்டு நாம் செய்ய வேண்டியது அவசியமாகும். நீங்கள் ஒரு இலட்சியத்தை ஏற்றுக் கொண்டு அதை நினைத்து அதை கனவு கண்டு அதை அடைந்து கொள்ள கடுமையாக உழைப்பீர்களாக இருந்தால் உங்களின் வெற்றியை யாராலும் தடுத்து விட முடியாது. நீங்கள் எங்கள் கல்விச் சாலையை விட்டுச் சென்றாலும் நாம் உங்களுக்கு கற்பித்த நல்ல விடயங்களைக் கடைப்பிடித்து நமது பாடசாலைக்கு நற்பெயரையும் புகழையையும் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் நீங்கள் அனைவரும் சிறப்பான வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

**திரு. S. சிவாகரன்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதித் தலைவரின் ஆசிச் செய்தி

எமது நாடு என்றுமே கண்டிராதவாறு உருவெடுத்துள்ள பொருளாதார சிக்கல் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பல்வேறு பாதிப்புக்களுக்கு மத்தியிலும் கொரோனா தொற்றுப் போன்ற சமூக இடைவெளிப்பிரச்சினைகள் போன்றவை காரணமாகவும் இம் மாணவர்களின் கல்வியில் ஏற்பட்ட இடையூறுகள் அதிகமானவை ஆயினும் உயதரப் பரீட்சை எழுத வேண்டும் என்பது காலத்தின் கட்டளையாகும்.

இலங்கையில் தற்போது நிலமையை சீர் செய்ய வேண்டுமாயின் இலங்கையின் கல்விக் கொள்கையில் பல்லேறு மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற அறிஞர்களின் சிந்னைக்கு மத்தியில் பரீட்சைக்கு முகம் கொடுக்க வேண்டிய நீங்கள் தன் நம்பிக்கையோடும், தைரியத்துடனும் செயற்ப்பட்டு எதிர் காலத்தினை மாற்றி அமைத்து நாளைய உலகில் தலை சிறந்த கல்வியாளர்களாக உதயமாக வேண்டுமென்று உங்களை வாழ்த்துகிறேன்.

இம் மாணவர்களுக்கு கல்வியூட்டிய சகல ஆசிரியர்களுக்கும் அதற்கு உறுதுணையாகவிருந்து வழிகாட்டிய அதிபர் அவர்களுக்கும் மற்றும் பிரதி அதிபர், உதவி அதிபர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. K. ருத்திரமூர்த்தி**
பகுதித்தலைவர், பிரதி அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவி அதிபரின் ஆசிச் செய்தி

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் உயர்தர மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டிற்கான உயர்தரதின நிகழ்வினை முன்னிட்டு பிரசுரமாகின்ற "கண்ணோட்டம்" என்ற நினைவு மலருக்கு ஆசிச் செய்தி ஒன்று வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பல்லாண்டு காலமாக எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு இப்பாடசாலை ஆற்றியுள்ள அளப்பரிய பணி இப்பிரதேசத்தின் கல்வி வரலாற்றிலும் எமது தாய் நாட்டின் வரலாற்றிலும் தனியொரு இடத்தைப் பிடித்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

அரசியல், சட்டம், வைத்தியம், தொழினுட்பம், கல்வி போன்ற இன்னோரன்ன துறைகளில் பெயரும் புகழும் பெற்றுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற பெருந்தகைகள் பலரை இப்பாடசாலை உருவாக்கியுள்ளமை அதன் சாதனைக்கு சான்றாக இருக்கின்றது.

இச்சாதனையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்ற இப்பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர் குழாத்துக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை எமது கல்லூரி சார்பாக இத்தருணத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

உயர்தர பரீட்சை எழுதவிருக்கின்ற எமது மாணவக் கண்மணிகள் வெற்றி பெற்று சாதனைகள் பல படைக்க நான் மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு. G. அல்பிரட்கரன்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவி அதிபரின் ஆசிச் செய்தி

எமது பாடசாலையில் க. பொ. த (உயர்தர) பரீட்சைக்கு இவ்வருடம் தோற்றவுள்ள மாணவர்களினால் வெளியிடப்படும் கண்ணோட்டம் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒருவருடைய வாழ் நாளில் மறக்கமுடியாத அனுபவம் கொண்ட பருவம் மாணவப்பருவமாகும் அதில் க. பொ. த. உயர்தர பரீட்சை என்பது முக்கியமான போட்டிப் பரீட்சையாகும். இப் பரீட்சையில் உயர் பெறுபேறுகள் பெறுவது என்பது மாணவர்களின் கனவாகும். இக்கனவினை நனவாக்கும் பாடசாலையும் ஆசிரிய சமூகமும் பெற்றோரும் தங்களினான முழுப் பங்களிப்பினையும் வழங்குகின்ற அதே வேளையில் கற்கும் மாணவர்களின் விடா முயற்சியும் சுய கற்றலும் பயிற்சியும் அர்ப்பணிப்புமே அதற்கு முக்கிய காரணமாகும்.

பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்ற மாணவர்களாகிய நீங்கள் பல்கலைக்கழகம் சென்று உயர் கல்வியைப் பெற்று உயர் பதவியை வகித்து எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பொருத்தமான நற்பிரஜைகளாக வாழ எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**திரு. வி. இந்திரகுமார்**
உதவி அதிபர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Staff - 2023

## Names of the Academic Staff

1. Mr S. Kalaiyarasan (Principal)
2. Mr B. Sajindren (DuputyPrincipal)
3. Mr S. Sivakaran (Assistant Principal)
4. Mr K. Ruthramoorthy (Assistant Principal)
5. Mr G. Alfredharan (Assistant Principal)
6. Mr V. Indrakumar (Assistant Principal)
7. Mrs P. Balasubramaniyam
8. Mrs S. Shanthakumar
9. Mrs S. Mahenthirarajah
10. Mrs R. Arulrajah
11. Mrs A. J. Christorex
12. Mrs G. Siva
13. Mrs R. Sayatharan
14. Mr M.A.M.M. Rizmy
15. Mrs B. Chandrakumar
16. Mrs R. Allis
17. Mrs M. Shanmugarajah
18. Mrs M. Rangarajan
19. Mrs M. Sureshkumar
20. Mrs K. Umawaran
21. Mr S. Uthayarajah
22. Mrs K. Sanathanan
23. Mrs V. Vijayakumar
24. Mrs U. Nimal
25. Mrs C. P. Justin
26. Mrs L. Arulkantharajah
27. Mrs S. Mathiyalagan
28. Mrs P. Manokaran
29. Mrs R. M. M. Vaz
30. Mrs S. Viswanathan


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. Mrs J. Mohan
32. Mrs N.Thayaparan
33. Mr K. Vijayakumar
34. Mrs K. Jeyarupan
35. Mr P. Ranjan
36. Mr Y. Thavajeevan
37. Mr S. Srithakshan
38. Mr S. Suthakaran
39. Mrs T. Subarajan
40. Mrs Y. Baskaran
41. Mrs M. Thayaparan
42. Mr T. Kartheepan
43. Mrs S.Tharmendra
44. Mrs S. Parthipan
45. Mr A. P. Bernard
46. Mrs K. Vijayarakavan
47. Mr S. Piratheepathasan
48. Mrs S. Thasarathan
49. Mr K. Raju
50. Mrs S. Rushikaran
51. Mrs I. M. Shamad
52. Mrs F. N. Melik
53. Mr S. Satheeskumar
54. Mr N. M. Jaleel
55. Mr M. S. M. Yasar
56. Mrs S. M. Shiyam
57. Mr M. W. M. Saajath
58. Mrs S. L. Rizwana
59. Miss K. Nitharshika
60. Mrs M.B. S. Rajath
61. Mr M.S.M. Jihath
62. Miss N. Thanushiya
63. Mrs S. Kumanan
64. Mrs S. M. Sangeeth


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. Mr A. Jitharthanam
66. Mrs H.M. S. Jamaniya
67. Mrs S.Jeyakumar
68. Mrs D. Satheeskumar
69. Mrs A. Shamuganathan
70. Mrs V. Uruthiran
71. Mr I. Santhirakumar
72. Mr S. Piratheepan
73. Mrs S. Pirapagaran
74. Mr M.M.H. Najjas
75. Mrs T. Kogulatheepan
76. Mr N. Sivakaran
77. Mr S. Loganathan
78. Mrs N. Raku
79. Mrs S. Muralitharan
80. Mrs K. Navaneetharajah
81. Mr M. P. M. Rasheed
82. Mrs J. Pushpa
83. Mrs R. Kumaratheepan
84. Mr A. Karunakaran
85. Mrs A.M. Aasir
86. Mrs S. Nanthakumar
87. Mrs K. Pathivarathan
88. Mr T. Senthooran
89. Mr M. I. M. Misbah
90. Mr S. Selvakumar
91. Mr. N. Nishanthan
92. Mr. J. Umesh
93. Mrs U. Lavani
94. Mrs S. Kopiraj
95. Mrs S. Jeyashanth
96. Mr A. R. Malik
97. Mrs N. Arasaretnam
98. Mrs U. Kekilathasan
99. Mrs S. Kalatharshan
100. Mrs J. Pararupan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. Mrs J. Sivakaran
102. Mrs K. Vijayanantham
103. Mrs R. Sivakumar
104. Mrs K. Prabakaran
105. Mrs K. Sarathbabu
106. Mr. T. Tharumarajah
107 Mrs. V. Kamalaneshan
108. Mrs. M.F.Rifna
109. Mrs.P.Jeewarathnam
110. Mrs. V. Velalagan
111. Mrs.J.Murukuppillai
112. Mrs S. Thamilvanan

## Names of the Non Academic Staff

| | | |
|---|---|---|
| 1. | Mrs T. Sivakumar | |
| 2. | Mr N. Thiviyakumaran | |
| 3. | Mr. N. Sobanaraj | (S.C) |
| 4. | Mrs.K.Sapthika | (S.C) |
| 5. | Mr A. Rehanandan | (D.O) |
| 6. | Mrs V. Saranya | (D.O) |
| 7. | Mrs S. Saruja | (D.O) |
| 8. | Mrs S. Keerthana | (D.O) |
| 9. | Mr T. Kokilarajah | (D.O) |
| 10. | Mr R. Mufasrin | (D.O) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Science Stream Teachers

| | |
|---|---|
| Biology | Mrs. S. Rusiharan |
| Com. Mathematics | Mr. K. Ruthramoorthy,Mr. A. Jithathanam<br>Mr. M.S.M. Jihath |
| Physics | Mr. S. Uthayarajah, |
| Chemistry | Mrs. S. Jayakumar, Mr. M.I.M. Misbah |
| ICT | Mr. S.Piratheepathasan |
| GIT | Mr. A.R. Malik |
| General English | Mrs. K. Sifra |

## Technological Stream Teachers

| | |
|---|---|
| Bio System Technology | Mrs.P.Balasupramaniyam |
| Engineering Technology | Mr. Y. Thavajeevan |
| Science for Technology | Mr. K. Ruthramoorthy<br>Mr. S.Uthayarajah<br>Mrs. S.Rusiharan<br>Mr. M.I.M. Misbah<br>Mrs. G. Pararupan |
| ICT | Mr. S. Piratheepathasan |
| Agro Science | Mr. P. Ranjan |
| Geography | Mr. T. Tharumarajah,<br>Mrs. S. Kumanan |
| Mathematics | Mr. M.S.M. Jihath, A. Jithathanam |
| General English | Mrs. K. Sifra,<br>Mrs. S. Nanthakumar |
| GIT | Mrs. Nasriyamalik |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Commerce Stream Teachers

| | |
|---|---|
| Business Studies | Mrs. K. Umawaran<br>Mr. V. Indrakumar |
| Accounting | Mrs.S. Visvanathan<br>Mr. K. VijayaKumar<br>Mr. V. Indrakumar |
| Economics | Mrs, L. Arulkantharaja |
| ICT | Mr. S. Piratheepathasan |
| English | Mrs. M. Rangarajan |
| GIT | Mrs. Nasriyamalik |

## Arts Stream Teachers

| | |
|---|---|
| Tamil | Mrs. S. Mahenthirarajah,<br>Mr. I. Chanthirakumar |
| Political Science | Mr. T. Kartheepan, Mr. Karunakaran |
| Logic | Mrs. J. Mohan |
| Agriculture | Mr. P. Ranjan, Mrs. R.M. Aasir |
| Drama & Theartre | Mrs. V. Urithran |
| Music | Mrs. K. Vijayaragavan |
| Dance | Mrs. M. Sureshkumar, Mrs. N. Thayaparan |
| Art | Mr. S. Srithaksan |
| Christianity | Mrs. A.J. Christorex, Mr. G. Alfredharan |
| Hindu Culture | Mrs. D. Kokulatheepan, Mr. N. Sivakaran |
| Islam | Mr. N.M. Jaleel |
| Home Economics | Mrs. A.Shanmuganathan |
| Geography | Mr. T. Tharumarajah, Mrs. S. Kumanan |
| History | Mrs. P. Manokaran |
| GIT | Mrs. Mrs S. Jeyashanth |
| English | Mrs. M. Rangarajan, Mrs I. M. Shamad |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Students Who got University Entrance

**1979**

| | |
|---|---|
| Medicine | K. Kumuthini |
| Engineering | M. Kirupaharan |
| Law | T. Thamilarasan |
| Physical Science | S. Pirnavasoathi, S. Satkunamalar |
| | M. Vasanthakumari |
| Commerce | S. Ganesamoorthy |
| Arts | T. Ariyamalar, V. Varnakulasingam |
| | P. Thusyanthini, S. Potselvi |
| | S. Malini, M.Komethagam |

**1980**

| | |
|---|---|
| Medicine | A.G. Thevaranjan |
| Engineering | P. Sivasithamparam |
| Law | s. Mohamed Jameel |
| Physical Science | S.Rasambikai, S.venuga |

**1981**

| | |
|---|---|
| Medicine | P. Arulpragasam |
| | S.Chanthirapalan |
| Veterinary Medicine | M.A.M. Fazie, M.C.M. Junaid |
| Physical Medicine | J. Annanavaparathi, S. Kumuthini |
| | S. Shanthidevi |
| Management | V. Rubaskaran |
| Agriculture | M.M.M.Fazeel |

**1982**

| | |
|---|---|
| Medicine | M. Mathiyalagan |
| Engineering | I.L Ameenul Bari, G. Baskaran |
| | G. Jeyamohan, T. Jeyamohan |
| | N. Vemalarajah |
| Physical Science | S. Murugathas, T. Subarajan |
| | M. Vasanthakumari |
| Agriculture | S.Siyamalagowry, S. Kalaranjiny |
| Arts | S.Jeevarajah,S.Punitham,K.Kalavathy |
| | K.Thurairajasingam, K.Santhakumary |
| | K. Selvarany, P. Kunaratham |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1983**

| | |
|---|---|
| Medicine | S. Vamathevan |
| Engineering | A.Ahamed Satheek, V.Nanthini |
| Dental Science | N. Santhimathi |
| Veterinary Medicine | R. Sathiyathevi |
| Agriculture | M.C. Jeya |
| Physical Science | K.Sugumar, S. Puvinojini |
| | M.Pathamaranjini |
| Arts | A. Antony Rajan, K. Sugirtharani |

**1984**

| | |
|---|---|
| Engineering | N. Nanthananthan, T. Thayaesvaran |
| | N. Thyaparan |
| Management | K. Ithayarajah |
| Agriculture | M.Puspalatha |
| Arts | P.K.Mariyamanagalam |

**1985**

| | |
|---|---|
| Medicine | A. Thusitha, M.C.M. Mahir |
| Engineering | T. Sivayogam, N. Miyhulananyhan |
| Bio Science | G. Jayasanthy |
| Physical Science | U.A. Naziar, V. Pakkiyarajah |
| Commerce | T. Baskaran |
| Arts | A.M. Jiffry, M.Y.M. Najeem |

**1986**

| | |
|---|---|
| Medicine | S. Sujikalathevi, N.Ramesh, M.I. Irsath |
| Engineering | U.L.A. Nazar |
| Bio Science | A.Zeenathul Marjoon, E.Jekatheesvary |
| | T. Kamarajan, P. Suventhiran |
| Physical Science | K. Baskaran, G. Suraganan |
| Arts | A.Satheek, T.Thayalan |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1987**

| | |
|---|---|
| Medicine | Y. Ubaithullah |
| Engineering | K. Baskaran, |
| Bio Science | R.Mathiyalagan, A.H.MohamedAmeen |
| Agriculture | R.Sivanesan |
| Arts | S. jayaranjanee,N.Jayanthini, A.Nalim |
| | S. Mohanaraj, S. Santhirasegaram |
| Law | K. Ravindran |

**1988**

| | |
|---|---|
| Medicine | M.H.Vajna |
| Physical Science | T. Paramanatham |
| Bio Science | S. Muralitharan, S.Sumanthinithevi |
| | A.H. Ameen, T. Ketheesan |
| commerce | S. Pramaharan, R. Thirunavukarasu |
| | S. Ravichanthiran, S. Thevethuyan |
| Arts | M. Lakkumam |

**1989**

| | |
|---|---|
| Medicine | M. Sujatha |
| Engineering | V. Ravindran |
| Bio Science | T.Ketheesan |
| Commerce | K. Sivakumar |
| Physical Science | K.Kovannan, V. Thevakumar |

**1990**

| | |
|---|---|
| Engineering | M.B. Rauf |
| Bio Science | Y.I.Shajafullah |
| | S. Mythili, M.Y.M. Satheek |
| Arts | K. Thankaththurai, S. Sivarajah |
| Commerce | S. Uthayakumar |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1991**

| | |
|---|---|
| Medicine | Y.I.Sajafullah |
| Engineering | M.B. Rauf |
| Bio Science | S.Sivathasan |
| Physical Science | A. Kaleelur Rahman |

**1992**

| | |
|---|---|
| Medicine | S. Sivathasan |
| commerce | K. Lingesvaran, S. Varatharajah |
| | M.Mohanathas |
| Arts | P. Sachithanantham, P.Arunakrinathan |

**1993**

| | |
|---|---|
| Medicine | T. Vinothini |
| Agriculture | V. Rajenthra Kumar |

**1994**

| | |
|---|---|
| Physical Science | P. Kalyani |
| Bio Science | G. Subathira |
| Commerce | S. Vimalarajah, S. Jeyapalan |

**1995**

| | |
|---|---|
| Medicine | K. Suthesvary |
| Management | M. Kulasegaram |
| Arts | R. Ganesan, S. Chanthirakumar |

**1996**

| | |
|---|---|
| Physical Science | S. Uthayarajah |
| Management | K. Thiruchchelvam |
| | T. Vijayakumar |
| Arts | N. Sabesan |
| | S.Mathivathani |

**1997**

| | |
|---|---|
| Engineering | T. Thavarajah |
| Physical Science | S. Uthayarajah |
| Bio Science | S. Kirupananthan |
| Management | P.B. Navarajah |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1998**

| | |
|---|---|
| Physical Science | S. Partheepan, A. Sathees Kumar |
| Arts | T. Utthayajeevamalar |
| | A. Arunthavarani |

**1999**

| | |
|---|---|
| Management | S. Mugunthan |
| Commerce | A.P Gunapalan, K. Vimeleshvaran |
| | T. Uthayakumar |
| Arts | S. Premavathani |

**2000**

| | |
|---|---|
| Physical Science | M. Jayakanthan, T. Kandeepan |
| | S. Sathees Kanthan, A. Thivakaran |
| Commerce | P. Jeyamalini |
| Arts | S. Srikaran, C. Premini |

**2001**

| | |
|---|---|
| Physical Science | M. Jayakanthan |
| Arts | S. Logesvaran, A. Mathusoothanan |

**2002**

| | |
|---|---|
| Medicine | M. Prasath |
| Bio Science | P. Thusitharan |
| Physical Science | S. Pothirajah, N. Suresh, R. Thusiyanthan |
| Arts | P. Thayalini, K. Rasikala, S. Satheepavani |
| | S. Ranjini, K. Mohanathas |

**2003**

| | |
|---|---|
| Bio Science | S. Raguvaran |
| Physical Science | K. Rahini |
| Commerce | G. Prasanthan |
| Arts | P. Kamalarajah, I. Sasikala, M. Lillymalar |

**2004**

| | |
|---|---|
| Physical Science | M. Mohanarajah |
| Arts | S. Rupavani |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2005**

| | |
|---|---|
| Arts | S. Kalaimath, T. Kala |

**2006**

| | |
|---|---|
| Bio Science | P. Manchereka |
| Commerce | P. Priyatharsan |
| Arts | T. Silogini, T. Kirushnavani, P. Rajeesh |

**2007**

| | |
|---|---|
| Quantity Survering | P. Jerusan |
| Agro Science | P. Manchireka |
| Animal Science | M. Jalini |
| Physical Science | S. Pragalathan |
| Arts | S. Thieepan, N. Rajkumar |
| | S. Kalista Cowsalya, V. Santhirakanthy |
| | M. Mathura, S. Sowmiya, K. Sutharsan |

**2008**

| | |
|---|---|
| Medicine | T. Mythry |
| Siddha Medicine | V. Varuna |
| Agriculture | M. Pagirathy |
| Bio Science | K. Bhanuga, E. Niluksana |
| Physical Science | P. Thadshyan, T. Dinesh |
| Arts | T. Kumuthini, S. Pratheepa, Y. Anitha |
| | K. Sangika |

**2009**

| | |
|---|---|
| Medicine | S. Thiluxie |
| Bio Science | T. Hemapriya |
| Eingineering | K. Kishakatheesh |
| Surveyoring | T. Dinesh |
| Physical Science | R. Ramanathas, M.Pavirajah |
| Arts | N. Ketheesvaran, N. Kopiga |
| | S. Kiruthithiga, Y. Vinotharsan |
| | P. Rajipalan, R. Suganya |

**2010**

| | |
|---|---|
| Physical Science | K. Thaseepan |
| MIT | G. Nisanthini |
| Commerce | S. Shanathan, T. Pirakash |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011**

| | |
|---|---|
| Medicine | P. Kethujan |
| Siddha Medicine | S. Sanjala |
| Engineeirng | T. Elanthika |
| Physical Science | M.I. Fathima Akeela |
| Management | S. Puspakanthan |
| Arts | R. Kajenthini, J. Mahinthini, K. Sathana |
| | S. Niroja, V. Nalini, J. Dilakshika, K. Sinthu |
| | P. Puviraj, S. Mirna Jenifar |

**2012**

| | |
|---|---|
| Medicine | P. Titus Sanjay |
| | E. Mithuran |
| | N. Upenthiran |
| Siddha Medicine | M. Vanisiri |
| Architecture | \|R. Kavilan |
| Arts | S. Thevika, T. Thiviya, K. Thusanthini |
| | L. Sanuraj, M. Laksini, Tharmitha |
| | R. Kejenthini, S. Thushalini |

**2013**

| | |
|---|---|
| Siddha Medicine | S. Derjan, K. Dinosini |
| Unani Medicine | P. Praveenan |
| Quantity Surveying | A. Jayshanth |
| | R. Logithan |
| ICT | S. Pratheesan |
| Management | N. Sutha, T. Prasanth |
| Arts | M. Sinthana, I. Thusyanthi |
| Art & Design | A.R.M. Hathe |
| Sports Science Mgt | L. Thanushiya |

**2014**

| | |
|---|---|
| Surveying | M. Jathursan |
| Agro Science | C. Hisani |
| ICT | A.P Nivetha |
| Bio Science | V. Thenuka |
| Food Prod.Tech. Mgmt. | R.Jeevarasa |
| Arts | N. Diashika, S. Sanjutha |
| | J. Jayaladchumi, R. Varathaledchumi |
| | K. Pavithra, S.K. Deliciya |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2015

| | |
|---|---|
| Medicine | S. Kugadarshi |
| Physical Science | S. Hishobaba |
| Commerce | \|Y. Rajitha, G. Thusanthan |
| Arts | K. Tipogini, J. Anusiya, A. Viruthika, L. Thurshana,K.Thanusha, J. Rokshana S. Tharsika, J.Shomika,N.Kalpanakumar |
| Management | S. Thathusana |
| Archologe | S. Sayanthakumari |
| Drama | S. Tharsika |

## 2016

| | |
|---|---|
| Engineering | T. Niluksha |
| Management | S. Subosana |
| Law | P. Thuvaraka |
| Peace & Revolution | T. Dhailakshini |
| MIT | M.Vithyajini |
| Arts | M. Mithursana, T.Thivya, N.Nilany Y. Jeeritha, N. Kokulraj, P. Janojini, K. Gajenthairan |
| Dnace | T. Kugalya |
| Art | N. Janushan |
| Drama | P. Niloshini |

## 2017

| | |
|---|---|
| Engineering | L. Prakavi |
| Medicine | A.K.M. Afkar |
| Law | J. Kishor |
| Peace& Revolution | V. Sujanthan |
| Management | Y. Anojan |
| Commerce | V. Arthini |
| Dance | S. Thasankika |
| Drama | S. Vimalatharshan I. Mesha |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2018

| | |
|---|---|
| Medicine | E. Nishahari |
| Engineering | K.Vinojith, A.Januprian |
| Agro Science | S. Harijeyani, N. Sahithiya, K. Viyukshana |
| Bio Science | S. Virushani, A.R.F. Safrin |
| Applied Science | U. Harithas, |
| Physical Science | K. Gobi Kathees |
| Arts | M. Lathusiya, N. Niluxi, V.Kousalyajeevani |
| Musice | K. Sathursini |
| Dance | U. Samruthi, R. Ajantha, N. Aaranikka, A. Madusiya |

## 2019

| | |
|---|---|
| Medicine | N. Sahithiya, S. Harrujeyani |
| Veterinary Medicine | T. Barclqy Ashwinth |
| Siddha Medicine | S. Virushani, G. Vithusana |
| Computer Science | Gobikathees |
| Management | T. Priya, J. Thishan, M. Rakshana, M.Niro, N.Dinoth |
| Engineeirng Technology | K. Dino, P. Mathitharan |
| Drafting Technology | M. Kishobiha |
| Farm Technology | J. Thinuja |
| Arts | S. Thishanthan, L. Harishan, N. Samiya |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2020**

| | |
|---|---|
| Medicine | G. Thadsithan<br>R. John Quinton |
| Siddha Medicine | Y. Kuhathasan |
| Physical Science | S. Januskar |
| Urban biore Source | R. Daneesha |
| Commerce | K. Janu |
| Engineeirng Technology | S. Thasanika<br>S. Thanusiyan<br>S. Kirieshan<br>N. Mithurshan |
| Bio Technology | S. Thusya |
| Arts | G. Vithasha<br>N. Abinaya<br>S. Harisha<br>P. Lithuja |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Names of the Technology Students (2022 Batch)



V. Kajanan, K. Vishalan, V. Dilakshan, M.K.M. Mohammed Sabrees, R. Yastiran, S. Dilaxan
V. Sathurjan, S. Praveen, S. Pabadaran, R. Sathursan, T. Nareshka, P. Varushiya
A. Arushka, S. Lathurshika, J. Dilakshika, R. Yatheesha

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Names of the Arts - A Students (2022 Batch)



S. Yathushan, R. Jenashan, A. Dilshan, A. Navaprashanth, M. Danusjan, N. Grishan, S. Tharmeekan, T. Lithurshan, T. Yathunath, S. Sathurshan, V. George Meshach, T. Vishanth, R. Rinothan
R. Kishalika, V.Rakshinie, M. Sarmika, E. Mithuna, S.P.T. Thushari, S. Theepika, M. Abishka, V. Lithurshi, T. Tharshana, S. Harsha, Y. Kayani, T. Suparnika, S. Anuja, P. Sivanika, R. Harini
T. Vithursha, U. Sukitha, K. Sathurshana, T. Vithurshana, T. Maithry, S. Yathursini, R. Suha

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Names of the Arts -B Students (2022 Batch)



Y. Kishan, P. Hamshawrthan, Y. Thanoj, U. Nithes, A.S. Praveen, T. Kushanthan, J. Jeroshan, P. Thanus, P. Sabithyan, P. Sharupan, R. Prathap, S. Dinojan, I. Nishakaran, R. Samintha, P. Losan, P. Rela, A.Mathuska, D.Mithusha, P.Pahirthana, L. Mishkaath, S. Lasla, S. Sankeerthana, S.Babysalini, S.Barunika, K. Jothika, J.Mathusha, M.Pavithra, T. M. F. Reefath, T. Shakthi, S. Lithiya, I. Vithurshika

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பள்ளிக் காலம்

சுற்றிச் சுழலும் உலகின் சூட்சம் கற்றறிய நிழல் தரும் மரமாய் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்ற ஆசிரியரே! எத்தனையோ விடைத் தாள்கள் திருத்திய உங்கள் கைகள் ஓய்வு எடுக்க நினைத்ததே இல்லை. அதற்கு சான்றாக இருப்பது வகுப்பில் நுழையும் போது உங்கள் கைகளில் படிந்த நீல, சிவப்பு கறையும் வகுப்பு முடியும் போது கையில் படியும் வெள்ளைக் கறையுமே! ஒரு முறை கேட்ட பாடலை மறுமுறை கேட்கவே யோசிக்கும் காலத்தில், ஒவ்வொரு நாளும் உங்கள் குரல் கேட்க காத்திருந்த காலங்களும் அதில் கற்றறிந்த பாடங்களும் ஏராளம்.

திட்டித் திட்டி தீட்டாமல் அன்பு மொழியால் எங்களைத் தீட்டிய ஓவியரே! உங்கள் பாடங்களால் பகுத்தறிந்தோம் குட்டிக்கதைகளால் தினம் மகிழ்ந்தோம். ஏட்டைக் கற்பிக்க ஏற்றதாழ்வு பாரா உங்கள் விழிகள் சொன்னது, மன்னிக்க, மறக்க கற்றக்கொள் என்று. பல நேரங்களில் குழப்பங்கள் கொண்டதுண்டு. உங்களை ஆசிரியர் என்று சொல்லவா, இல்லை என் மனமறிந்த நண்பர் என்று சொல்லவா? நீங்கள் அதிகம் பேசிப் பார்த்ததில்லை. அதனால் தான் என்னவோ உங்கள் பாடங்கள் புரிய அதிக நேரங்கள் எடுப்பதில்லை.

முழு நிலவைப்போல் பிரகாசிக்கும் உங்கள் முகம் கற்றுத்தந்தது என்னவென்றால் "ஒவ்வொரு தேடலிலும் மகிழ்ந்து இரு" என்று. ஒரு தெளிந்த நீரோடை உங்கள் உள்ளம். அதில் முத்துக்கள் கிடைப்பது எளிதிலும் எளிது. எத்தனையோ நினைவுகள் கண்களின் முன். வருகைப் பதிவிற்கு தினமும் நீங்கள் வாசித்த எங்கள் பெயர்கள், தேர்வெழுதும் போது நீங்கள் கொடுத்த காகிதங்கள், மேடையில் பேசிய ஊக்க மொழிகள். நடை, உடை, பாவனை என எங்கள் பள்ளிக் காலங்கள் தூக்கி சுமக்கும் உங்கள் நினைவலைகளை உங்களோடு செலவிட்ட காலங்கள் சுருங்கச் சொன்னால் கம்பன் கவிதைகளே?

U. **அரியோனா.** A.P
Arts-2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியும் உலக நாடுகளும்

அன்று தொடக்கம் இன்று வரை ஒரு நாட்டிற்கு பொருளாதாரம் என்பது இன்றியமையாத ஒன்றாகவே காணப்படுகின்றது. ஒரு நாட்டினுடைய வளர்ச்சி, அபிவிருத்தி, ஆதிக்கம், செல்வாக்கு என்பன அதனுடைய பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டமைகின்றன. இதன் படி தற்காலத்தை நோக்குவோமானால் ஒவ்வொரு நாடுகளும் பல்வேறு காரணிகளால் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங் கொடுத்துள்ளன. ஒரு நாட்டினுடைய பொருளாதார தன்னிறைவு என்பது ஒரு நாடடினுடைய அனைத்து நடவடிக்கைகளுக்கு தேவையான சகல வளங்களும் பொருட்களும் சிறப்பாகவும் தன்னிறைவாகவும் கிடைக்கப் பெறுவதே ஆகும். பொருளாதாரம் சிறப்பாக அமையும் போது மட்டுமே. வீதி அமைத்தல், குடியிருப்புக்கள் அமைத்தல், கல்வித்துறை மேம்பாடு, சுகாதாரத்துறை மேம்பாடு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இருப்பினும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது உணவுத் தட்டுப்பாடு, கல்வி நடவடிக்கைகளில் சீறற்ற தன்மை, அபிவிருத்தி மற்றும் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியா நிலைகள் ஏற்படும். குறிப்பாக யுத்த நடவடிக்கைகள், தொற்று நோய்கள் பரவுதல், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றின் போது பொருளாதார நெருக்கடிகள் அதிகம் தோற்றுவிக்கப்படுகின்றன. யுத்த நடவடிக்ககைகளில் ஆயுதங்களுக்காகவும், வாகனங்களுக்காகவும் அதிகளவு செலவு செய்யப்படுவதால் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு படிப்படியாக வறுமை ஏற்படுகிறது.

யுத்த நடவடிக்கைகளின்போது தொழில் சார் நடவடிக்கைகளான கைத்தொழில்கள் இடைநிறுத்தப்படுவதனாலும் பொருளாதார நடவடிக்கைகளில் நெருக்கடி ஏற்படுகிறது. மேலும் சுரங்க கைத்தொழில் ஒன்றான பெற்றோலியம் உலக சந்தையில் குறைவடைந்தமையினாலும் கீழைத்தேய நாடுகள் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறான யுத்த நாடவடிக்கைகளுக்கு உதாரணமாக ரஷ்யா - உக்ரைனிற்கு இடையில் ஏற்படும் யுத்தத்தை குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதாரமானது பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை எனும் அடிப்படையிலேயே நகர்த்தப்படுகிறது. இருப்பினும் கொரோனா காலகட்டத்தில் நாடுகளுக்கு இடையிலான ஏற்றுமதி இறக்குமதி தடைப்பட்டமையால் இலங்கை உட்பட அனைத்து நாடுகளுக்கும் வருமானம் தடைப்பட்டது. இதனால் ஒவ்வொரு நாடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உட்பட்டது, அத்துடன் இலங்கையில் யூரியா பசளை தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாக விளைச்சல்கள் குறைவாகவே கிடைத்தது. இருப்பினும் பொருட்களின் விலை அதிகமாக காணப்பட்டது.

இதனால் வருமானமின்மை. செலவு அதிகம் எனும் நிலைக்கு ஒவ்வொரு மனிதனும் இட்டுச்செல்லப்பட்டான். இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் பொருளாதார நெருக்கடிக்கு செல்லும் போது ஒவ்வொரு தனி மனிதனையும் அடிப்படையாகக் கொண்டு நாடும் பொருளாதார நெருக்கடிக்குள் இட்டுச்செல்லப்படுகிறது.

இவ்வாறு வளர்ச்சியடைந்து வரும் நாடு பொருளாதார நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்லப்படும் போது அது வேறொரு நாட்டிடம் நிதி கேட்கும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு நிதி கேட்கும் நாடானது கொடுக்கும் நாட்டினுடைய கட்டளைகளுக்கும் விதிகளுக்கும் கட்டுப்படும் நிலையில் நவ காலணித்துவதிற்குள் சிக்கிக்கொள்கின்றது.

பொருளாதார நெருக்கடிகள் நிரந்தரமானவையல்ல பல நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை அவை வெற்றிகரமாக முறியடி சிறப்பான நாடுகளாக தோற்றம் பெற்றுள்ளதை காணலாம்.

PMF. Reefath
Arts -13B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் உயிர்த்தாய் உவெஸ்லி

அகரம் பயின்றிட ஆனந்தமாய் இங்கு வந்தேன்
ஆரம்பக்கல்வி தந்தாய்
உன் ஆலமரம் சிறுவர் பூங்கா எங்கும் கற்று வந்தேன்
சுறுசுறுப்பான பாலர் பருவத்தில் உன்னிடமே சுகமாக
உன் முற்றம் எங்கும் சுற்றி வந்தேன்
ஆடிப்பாடி ஆனந்தமாய்த் திரிந்தேன்

பாசமிகு குருமார்கள் பாசமுடன் கற்பித்தார்கள்
ஆரம்பக் கல்வி ஆயிரம் அறிவு தந்தாய்
உன் ஆவியினால் என்னை பேணிக்காத்தாய்
பாசமிகு முருகையா தலைமை ஆசான் காலத்தில்
பாலர் பாடம் கற்றேன்
பிரியமான பிரபாகரன் தலைமை ஆசான் காலத்தில்
பிரியமுடன் பல வகுப்பில்
பிள்ளைப் பருவ அறிவைப் பெற்றேன்.
தலைமை ஆசான் கலைக்கு அரசன் கலையரசன் ஐயா
காலத்தில் கலைப்பிரிவில் உயர்தர கல்வி கற்றேன்.

எனக்கு பாலர் முதல் உயர்தரம் வரை
உவெஸ்லி கல்விப் பசிக்கு அறிவுதந்து என்னை
உருவாக்கிய என் ஆசான்களுக்கு கோடானு கோடி நன்றிகள்.
வாழ்க என் உயிர் தாய் உவெஸ்லி அன்னையே
உன் பாதம் பணிந்து
உன் ஆசியுடன் விடைபெறுகிறேன்.

V. Rakshinie
Art's -13A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் புத்தகம்

கையில் பேனாவோடும்
மனதில் கவலையோடும்
என் இலக்கை நோக்கிய
பயணத்தோடும்
தினமும் நினைக்கின்றேன் உன்னை
என் வாழ்வில் பாதி என்று
சொல்வதை விட
முழுவதும் என்று சொல்லலாம்
உன்னோடு தான் என் விடியல்
என்னை நானே அறிந்தேன்
உன் வாயிலாக.

இந்த உலகை நான் அறிந்தேன்
என் புத்தகத்தின் பக்கங்களினால்
முடிவுரை வரைக்கும் என்னை
மூடிவிடாமல்
நன்றியுரைக்கும் என்னை
அழைத்துச் சென்றாய்
காகிதங்கள் என்று உன்னை
நான் இரசித்தேன் என்னை
கவரும் கனவான் ஆனாய்
மீண்டும் உன் பக்கங்களில்
நான் தவழ . . . . .

Sivanseyal Praveena
A/L Commerce - 2023



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவியாகிய எனது சிந்தனையில் . . .
# விடா முயற்சியும் ஒழுக்கமும்

எந்தச் செயலைச் செய்ய எத்தனித்தாலும் அந்தச் செயலுக்குத் தகுந்த அர்பணிப்பு எம்மிடம் காணப்படல் வேண்டும். விடாமுயற்சி வெற்றியின்பால் எம்மை நகர்த்திச்செல்லும். பள்ளிப்பருவத்தில் நாம் பல்வேறு வகையான சவால்களை எதிர்நோக்க வேண்டிய தேவை உருவாகின்றது. ஒரு சாதாரண மனிதனின் முதல் படியான சாவால்கள் பள்ளிப்பருவத்தில் பரீட்சையாக இணைப்பாட விதான செயற்பாடாக உருவெடுக்கின்றது.

பாலர் பாடசாலையில் காலடி எடுத்துவைக்கும் போதே மழலைமொழியில் பாலர்கள் இலக்கினைச் சொல்வர். அந்த இலக்குகளின் பெறுமதி அறியாத பருவம் அது. ஆனால் ஏதோ ஒரு வகையில் குடும்பத்தாலும், சமூகத்தாலும் ஒரு உந்து சக்தியாக பாலர் நெஞ்சில் விதைக்கப்பட்டு விடும். காலம் செல்லச் செல்ல கல்வியின் நெருக்கமான காலகட்டங்களை எதிர்நோக்குவர். அந்த நெருக்கடியான காலத்தில் போய் உனது இலக்கு என்ன? என்று வினவும் வேளையில் ஒரு சில மாணவர்களைத் தவிர பெரும்பான்மையானவர் சொல்வது சித்தி எய்தினால் போது என்றுதான்.

எவ்வாறான சூழ்நிலையிலும் ஒரு மனதுடன் விடா உத்வேகத்துடன் ஒன்றின் மீதான குறிக்கோளை அடையச்செயற்பட்டால் நிச்சயமாக வெற்றியினை எய்தலாம். ஆனால் எம் மத்தியில் அதற்கான பல தடைகளும் சவால்களும் காணப்படுகின்றன. சவால்களை முறியடிக்க வேண்டுமானால் எமது இலக்கை அதுவும் பல்கலைக்கழக இலக்கை அடைய வேண்டுமானால் கல்வி என்ற ஒன்றினால் மட்டுமே முடியும். படிப்பு அதன் அவசியத்தை உணர்ந்தவனால் கற்காமல் இருக்கவே முடியாது.

இன்னிளைப்பாறுவம் என்றிருந்தால் - வழி
என்னென்ன வாகுமோ ஓரிரவில்
சென்றிளைப்பாறுக முற்றிடத்தே - தம்பி
தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே!
சாதனைப்பூக்களை ஏந்துமுன்னே - இங்கு
நல்ல செடி இளைப்பாறிடுமோ?

- சாலை இளந்திரையன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளந்திரையனாரின் "பூத்தது மானுடம்" என்னும் கவிதைத் தொகுப்பில் இக்கவிதையை வாசிக்க நேர்ந்தது என்னால். கணப்பொழுதில் என் மூளையும் மனமும் இவ்வரிகளின் சுவையினைப் பற்றி விட்டன. சோர்வுடன் நாளை நாளை என்று இருப்பதால் இளைபாரும் ஓரிரவில் கூட நமது வாழ்க்கை தலைகீழாக மாற நேரும். இலக்கினை அடைய உழைப்பு முக்கியம். உன் சாதனைகளை உலகிற்கு அறியச் செய்யும் முன்னே ஒரு மாணவனாக நீ இளைபாறல் ஆகாது சகோதரமே விடாமுயற்சி உனது நன்நோக்கத்தை அடைய வழிவகுக்கும் என்னருமை சிநேகிதமே!

காலைபடி - கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும் படி
கற்பவை கற்கும் படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி?

- பாரதிதாசன் -

விடாமுயற்சியால் கல்வியையோ அல்லது ஏதோ ஒரு இலக்கையோ எய்தலாம். ஆனால் அதனால் நாம் செய்யும் காரியம் சிறக்க வேண்டுமானால் ஒழுக்கம் அவசியமாகும். "கற்றது கையளவு கல்லாதது கடலளவு" என்பர். கையளவு கற்றவற்றை வைத்துக் கொண்டு பெருமை பூணுவது என்பது கற்றவருக்கு அவ்வளவு நன்றாக அமையாது. எல்லோருடனும் பண்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்வதே கற்ற கல்வியிலும் ஒழுக்கத்தின் சிறப்பினை எடுத்தியம்பும்.

" ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை; இழுக்கத்தின்
எய்துவர எய்தாப்பழி"

(திருவள்ளுவர் - அதிகாரம் -14)

வள்ளுவரின் இக் குறளினூடாக ஒழுக்கத்தினால் எவரும் மேம்பாடடைவர். ஒழுக்கத்தில் இருந்து தவறும் பட்சத்தில் தகாத பெரும் பழியை அடைவர். பள்ளியறையில் ஆசானின் மனம் புண்பட நடப்பது நன்றன்று என்று கேள்விப்பட்டிருப்போம். அதன் வினைப் பயனை உணர்ந்தவர் பலர் ஆகவே மணவர்களாகிய நாம் ஒழுக்கத்தினைப் போற்றி நன்நெறியில் நடப்போமாக.

S. Keerthana
Arts -12A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

இம் மலராக்கத்திற்கு உதவியவர்களுக்கும்,

ஒப்புநோக்கியவர்களுக்கும்,

விழாவில் கலந்து சிறப்பித்த அதிதிகள்,

அதிபர், பிரதி அதிபர் உதவி அதிபர்கள்,

ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்,

மாணவர்கள், பெற்றோர்கள்,

பிரமுகர்களுக்கும

மனமார்ந்த நன்றிகளைத்



தெரிவித்துக் கொள்கின்றோம்.




சஞ்சிகை A/L மலர் (கண்ணோட்டம்)
வெளியீடு கமு/கமு/ உவெஸ்லி உயர்தர பாடசாலை
பதிப்பு ஜனவரி - 2023
தகவல் ஒழுங்கமைப்பு திரு. க. ருத்திரமூர்த்தி (பகுதித்தலைவர்)
அச்சுப்பதிப்பு விக்டரி அச்சகம், கல்முனை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








உவெஸ்லி உயர்தர பாடசாலையின்
A/L Day விழாவிற்கான மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்டரி அச்சகம், கல்முனை.